பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி - சென்னை - 4
28 09 2025 SUNDAY 6 45 AM

**வணக்கம்-மாநில செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

- கரூரில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 39 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த சம்பவத்தில் காயமடைந்த 50க்கும் மேற்பட்டோர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
- இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசுத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.
- இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்துவதற்காக ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையிலான ஒரு நபர் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனந்திறந்து பேசும் மன்கி பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.
- ஆசிய கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியின், இறுதியாட்டத்தில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

>>>>>>><<<<<<<

கரூர் மாவட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி, 10 குழந்தைகள், 17 பெண்கள் உள்பட 39 பேர் உயிரிழந்தனர். காயமடைந்தவர்களில் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் 23 பேர் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கரூரில் தவெக தலைவர் திரு விஜய், நேற்று மாலை பிரச்சாரம் மேற்கொண்ட போது மின்தடை ஏற்பட்டதையடுத்து, அங்கு கூடியிருந்த மக்கள் பதற்றம் காரணமாக வெளியேற முற்பட்டபோது ஏற்பட்ட கூட்ட நெரிசலில், இந்த துயர சம்பவம் நேரிட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவம் குறித்து அறிந்தவுடன், உடனடியாக நேற்று நள்ளிரவு கரூர் சென்ற முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின், உயிரிழந்தவர்களின் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

அவர்களது குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறிய அவர், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை சந்தித்து ஆறுதல் கூறியதுடன், அவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை குறித்தும் கேட்டறிந்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. மு.க.ஸ்டாலின், தமிழக வரலாற்றில் இதுவரை நடைபெறாத துயர சம்பவம் இது என்று குறிப்பிட்டார்.

(சவுண்ட் பைட் - ஸ்டாலின் 31 செகண்ட்ஸ்)

இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்த ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒருநபர் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளதாகவும், இந்த ஆணையம் அளிக்கும் அறிக்கையின்படி அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்று திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்தார்.

முன்னதாக, மாநில அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த சம்பவத்தில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு தலா 10 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா ஒரு லட்ச ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர், பிரதமர், மத்திய அமைச்சர்கள், உள்ளிட்ட தலைவர்கள் பலர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், இச்சம்பவம் தமக்கு மிகுந்த மனவேதனை அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவிட்டுள்ள அவர், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்வதாகவும், காயமடைந்தவர்கள்

விரைவில் குணமடைய இறைவனைப் பிரார்த்தனை செய்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த துயர சம்பவம் மனதில் சொல்ல முடியாத வலியை ஏற்படுத்தியுள்ளதாக குடியரசுத் துணைத் தலைவர் திரு சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், அன்புக்குரியவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு தமது இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதாக கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள செய்தியில், இச்சம்பவம் துரதிருஷ்டவசமானது என்று தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில், அன்புக்குரியவர்களை இழந்து வாடும் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்வதாக கூறியுள்ளார்.

இந்த இக்கட்டான தருணத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் மன வலிமையுடன் இருக்கவும், காயமடைந்தவர்கள் விரைவில் பூரண குணமடையவும் இறைவனை பிரார்த்தித்துக் கொள்வதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தமக்கு மிகுந்த வருத்தமளிப்பதாக உள்ளது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்வதாக கூறியுள்ளார்.

தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், இந்த சம்பவம் மிகுந்த மனவேதனையை அளிப்பதாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்வதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - எல்.முருகன் 23 செகண்ட்ஸ்)

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்வதாக எதிர்கட்சித் தலைவரும், அஇஅதிமுக பொதுச் செயலாளருமான திரு எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தமக்கு மிகுந்த மன வேதனையை அளித்துள்ளதாக த.வெ.க. தலைவர் திரு. விஜய் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்வதாகவும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, இந்த துயர சம்பவம் குறித்து அறிக்கை அளிக்குமாறு தமிழக அரசை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>>>><<<<<<<

*இனி, மக்களின் மனதை வென்ற மத்திய அரசின் திட்டங்கள்...*

*சேவை, நல்லாட்சி என்பதை தாரக மந்திரமாக கொண்டு ஓய்வின்றி பணியாற்றி வரும் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, சிறந்த நிர்வாகத்தின் மூலம் மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது.*

*இதுகுறித்த சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டம்.*

*>>>>>>><<<<<<<*

*பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனந்திறந்து பேசும் மன்கி பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.*

*நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.*

*>>>>>>><<<<<<<*

*இருவரிச் செய்திகள்*

*ஐ.நா பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினராக இந்தியா இடம்பெறுவதற்கு ரஷ்யா ஆதரவு தெரிவித்துள்ளது.*

*>>>>>>><<<<<<<*

*ஹிமாச்சலப்பிரதேசத்தில் உள்ள பனிமலைப் பகுதிகள் யுனெஸ்கோ பாரம்பரிய சின்னங்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.*

*>>>>>>><<<<<<<*

*விளையாட்டுச் செய்திகள்*

*ஆசிய கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியின், இறுதியாட்டத்தில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.*

*துபாயில் நடைபெறும் இப்போட்டி, இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.*

*>>>>>>><<<<<<<*

*17 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்துப் போட்டியில், இந்தியா பட்டம் வென்றது.*

*>>>>>>>END<<<<<<<*